# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1187/15 - 2001 ජුනි 06 වැනි බදාදා - 2001.06.06

1187/15 ஆம் இலக்கம் - 2001 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

22 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 22 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர் கல்வி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சர் இந்திக குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் இக்கட்டளை மூலம் -

(i) 2001, யூன் 15 ஆந் திகதி தொடக்கம் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தைத் தாபிக்கின்றேன்.

(ii) அத்தகைய வளாகத்துக்கு இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் என்ற பெயரையும் மகுடப் பெயரையும் குறித்தொதுக்குகிறேன்.

(iii) அத்தகைய வளாகம் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்.

(iv) அத்தகைய வளாகத்துக்கு தொடர்பாடல் மற்றும் வணிகக் கல்வி மற்றும் பிரயோக விஞ்ஞான பீடங்களைக் குறித்தொதுக்குகிறேன்.

(v) இதற்கான அட்டவணையில் I ஆம் நிரலில் எடுத்துக்காட்டப்பட்ட அத்தகைய வளாகத்தின் பீடங்கள் அவ்வட்டவணையின் நேரொத்த பதிவில் எடுத்துக்காட்டப்பட்ட கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்.

இந்திக குணவர்த்தன,
உயர் கல்வி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2001, யூன் 06.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| தொடர்பாடல் மற்றும் வணிகக் கல்விப் பீடம் | மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைப் பகுதி<br>தொழில் மற்றும் முகாமைக் கற்கைப் பகுதி |
| பிரயோக விஞ்ஞான பீடம் | பௌதிக விஞ்ஞானப் பகுதி<br>கணனி விஞ்ஞானப் பகுதி |

06-647


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.